


சென்னை மியாட் ஆஸ்பத்திரியில் நவீன கருவி மூலம் வங்காள தேச நடிகை பர்வீன் சுல்தானா திதிக்கு மூளையில் இருந்த கட்டி அகற்றப்பட்டது. அவருக்கு ஆஸ்பத்திரியின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ் வாழ்த்து தெரிவித்த போது எடுத்த படம். அருகில் அறுவை சிகிக்சை செய்த டாக்டர்கள் உள்ளனர்.

# வங்காள தேச நடிகைக்கு மூளையில் அறுவை சிகிச்சை செய்து கட்டி அகற்றம்

## மியாட் ஆஸ்பத்திரி டாக்டர்கள் சாதனை

சென்னை, ஆக.22-

சென்னை மியாட் ஆஸ்பத்திரியில் வங்காள தேச நடிகை பர்வீன்சுல்தானா திதிக்கு மூளையில் நவீன அறுவை சிகிச்சை செய்து கட்டியை டாக்டர்கள் அகற்றி சாதனை படைத்தனர்.

### நடிகைக்கு மூளையில் கட்டி

வங்காள தேச நடிகை பர்வீன் சுல்தானா திதி (வயது 49). அவருக்கு தலையில் அடிக்கடி வலி ஏற்பட்டது. இதன்காரணமாக அவருக்கு காது மூக்கு தொண்டை நிபுணர்கள் சைனஸ் நோய் என்று நினைத்து சிகிச்சை அளித்துள்ளனர்.

ஒரு கட்டத்தில் அவருக்கு குமட்டல் ஏற்பட்டது. அதனால் எம்.ஆர்.ஐ.ஸ்கேன் எடுத்துப்பார்த்ததில் மூளையின் இடது பக்கத்தில் கட்டி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதன் காரணமாக அந்த நடிகை பர்வீன் சுல்தானா திதி சென்னை மியாட் ஆஸ்பத்திரிக்கு சென்றார். அப்போது அவருடன் அவருடைய குழந்தைகள் லமியா, திப்தோ ஆகிய 2 பேர்களையும் அழைத்து வந்திருந்தார். அறுவை சிகிச்சையின்போது தனது தாயின் தலைமுடியை அகற்றாமல் அறுவை சிகிச்சை செய்ய முடியுமா? என்று டாக்டர்களிடம் கேட்டனர். இதையொட்டி தலை முடியை மொட்டை அடிக்காமல் குறைந்த அளவு முடியை மட்டும் அகற்ற டாக்டர்கள் முடிவு செய்தனர்.

### நவீன கருவி கொண்டு அறுவை சிகிச்சை

அதன்படி பர்வீன் சுல்தானா திதிக்கு சிறிய துளையுடன் மூளையில் உள்ள கட்டியை அகற்றுவதற்காக நேவிகேஷன் என்ற நவீன சாதனைத்தை மியாட் ஆஸ்பத்திரி நிறுவனர் டாக்டர் பி.வி.ஏ. மோகன்தாஸ் இறக்குமதி செய்தார். பிறகு அறுவைசிகிச்சை 6 மணிநேரம் நடைபெற்றது. அப்போது 1 செ.மீ.நீளத்தில் துளையிடப்பட்டு ஒரு எலுமிச்சம்பழம் அளவு இருந்த கட்டி அகற்றப்பட்டது.

இந்த கட்டி இருந்திருந்தால் அவரது பேச்சு பாதித்திருக்கும். தற்போது அவர் நன்றாக இருக்கிறார். அவருக்கு எந்த பிரச்சினையும் இல்லை. அவருக்கு அறுவை சிகிச்சை செய்த இடத்தில் தழும்பும் தெரியாது. அந்த அளவுக்கு சிறிய துவாரம் போடப்பட்டு நவீன அறுவை சிகிச்சை நடந்தது. அவருடை தலை முடி வெட்டப்படாததால் அவருக்கு அறுவை சிகிச்சை நடந்தபடியே தெரியவில்லை.

இந்த தகவலை மியாட் ஆஸ்பத்திரியின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ் தெரிவித்தார்.